# அல்பா ஓமெகா அற்புத திருச்பை

என் பெயர் பால் டேவிட் என்கிற சிலம்பரசன், வியாசர்பாடி பகுதியில் 5 வருடங்களாக தேவன் அழைத்த அழைப்பிற்கு பாத்திரவானாய் குடும்பமாய் முழு நேர ஊழியம் செய்துக்கொண்டு வருகிறோம்





1. பிரதி மாதம் வாக்குத்தத்த ஆராதனை

ஒவ்வொரு மாதமும் முதலாம் தேதி அதிகாலை 5 மணி முதல் 7 மணி வரை அந்த மாதம் முழுவதும் தேவன் நம்மையும் நம் குடும்பத்தையும் வருமானத்தையும் போக்குவரத்தையும் ஆசீர்வதிக்க வாக்குத்தத்த ஆராதனை நடைபெறும்

2. பரிசுத்த ஓய்வு நாள் ஆராதனை

ஒவ்வொரு ஞாயிறு கிழமையும் பரிசுத்த ஓய்வு நாள் ஆராதனை காலை 9 மணி முதல் 11 மணி வரை நடைபெறும். தற்போது நம் சபையின் மேல் தளம் தகரம் என்பதால் அதிக உஷ்ணத்தின் காரணமாக நேரம் மாற்றப்பட்டு காலை 7 மணி முதல் 9 மணி வரை நடைபெறுகிறது.





3. ஞாயிறு சிறுவர் பள்ளி




ஒவ்வொரு ஞாயிறு கிழமையிலும் மாலை 4 மணி முதல் 5 .30 மணி வரை சிறு பிள்ளைகளுக்கான கதைகள், பாடல்கள், வசனங்கள், நடனங்கள் மற்றும் விளையாட்டுகள் கற்றுக்கொடுத்து பிள்ளைகளை தேவ ராஜ்ஜியத்துக்கு உரியவர்களாய் நடத்திக் கொண்டு வருகிறோம்.

4. அதிகாலை ஜெபம்

திங்கள் முதல் சனி வரை ஒவ்வொரு நாளும் அதிகாலையில் 5 மணி முதல் 6 மணி வரை தேசத்திற்காக, தேவ ஊழியங்களுக்காக, ஊழியம் செய்கிற ஊழியர்களுக்காக, நம் சபைக்காக, சபையின் தேவைகளுக்காக, சபை விசுவாசிகளுக்காக மற்றும் விசேஷ குறிப்புகளுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்.




5. போதகர்கள் கூட்டம்





ஒவ்வொரு மாதமும் முதலாம் வார புதன்கிழமை அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை தேவ ஊழியத்தை செய்து வரும் சில போதகர்கள் இணைந்து தேசத்திற்காகவும், தேவ ஊழியர்களுக்காகவும், ஊழியங்களுக்க்காகவும் மற்றும் கடைசி காலத்தைக் குறித்தும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்படும்

## 6. உபவாச ஜெபம்

ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை தோறும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை சபையார் இனணந்து உபவாசத்தோடு தேசத்திற்காக, சபைக்காக, சபை விசுவாசிகளுக்காக விசேஷமாக இரட்சிக்கப்படாதவர்களுக்காகவும் மருத்துவமனையில் உள்ளவர்களுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்படும்.



7. வாலிபர் கூடுகை






ஒவ்வொரு மாதமும் 3 வது புதன் கிழமை மாலை 6 மணி முதல் 8 மணி வரை வாலிபர்களுக்கான விசேஷ ஆராதனை நடைபெறும். அதில் வாலிபர்கள் தேவனுக்கு விசேஷமானவர்கள் என்றும் எல்ல அன்பை விட தேவனுடைய அன்பே உண்மையானது என்று உணர்ந்து கொள்ள, வாலிபர்களே இணைந்து துதி பாடல்கள் மட்டும் ஆராதனைகளை நடத்துவார்கள்

## 8. பெண்கள் கூட்டம்



ஒவ்வொரு வாரம் வியாழக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை வரை பெண்களுக்கான விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்படும். ஒவ்வொரு பெண்களும் குடும்பத்திலும், சபையிலும், சமுதாயத்திலும் உயர்ந்திருக்கவும், விசேஷமாக தேவ ஊழியம் செய்யும் பெண்களுக்கான ஜெபம் ஏறெடுக்கப்படும்.

## 9. வேதாகம கல்வி



ஒவ்வொரு வாரம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை தேவனுடைய வேதத்தை இன்னும் அறிந்துக்கொள்ள, வேதத்தின் ரகசியத்தை ஆராய்ந்து அறிந்து கொள்ள விரும்புகிற பெரியோர் மற்றும் வாலிபர்களுக்கான வேதபாடம் நடைபெறும்.

## 10. வீட்டுக்கூட்டம்





ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் 8.30 மணி வரை விசுவாசிகள் ஒவ்வொருவர் வீட்டிலும் குடும்ப ஆசீர்வாத கூட்டம் நடைபெறும்.

## 11. கிறிஸ்துமஸ் கேரல்

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதத்தில் இயேசுவின் பிறப்பை குறித்த கேரல் நடைபெறும். இரவு 9 மணி முதல் 2 மணி வரை ஒவ்வொரு விசுவாசிகள் வீட்டிற்கு போதகர், சபையார் மற்றும் கிஸ்துமஸ் தாத்தா சென்று இயேசு பிறந்த நற்செய்தியின் வாழ்த்துக்களை செலுத்தி ஜெபித்து வருவோம்.





## 12. கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் நாட்களுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடைபெறும். இயேசுவின் பிறப்பை குறித்த நற்செய்தி, மற்றும் பிள்ளைகளின் நடனங்கள் நாடகங்கள் மற்றும் கிறிஸ்துமஸ் பரிசுகளை அளித்து இயேசுவின் பிறப்பை கொண்டாடுவோம்.









## 13. விடுமுறை வேதாகம பள்ளி

ஒவ்வொரு வருடம் மே மாதத்தில் சிறுபிள்ளைகளுக்கான கோடைக்கால விடுமுறை வேதாகம பள்ளி நடைபெறும். இதில் 80 முதல் 100 பிள்ளைகள் வந்து கலந்து கொள்ளுவார்கள். திங்கள் முதல் வெள்ளி கிழமை வரை காலை 9 மணி முதல் 1 மணி வரை நடைபெறும்.

அதில் சிறுவர்களுக்கான பாடல்கள், கதைகள், வசனங்கள், நடனங்கள் மற்றும் வகுப்புகள் பிரித்து புத்தகங்கள் மற்றும் கைவேலைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

முடிந்த பிறகு பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஜூஸ் மற்றும் ஸ்னாக்ஸ் வழங்கப்படும். சனிக்கிழமை மட்டும் பிள்ளைகளுக்கான விளையாட்டு போட்டி மற்றும் அன்பின் விருந்து நடைபெறும்.

கடைசியாக பிள்ளைகளுக்கான நடன நிகழ்ச்சிகள் வைத்து சிறப்பு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் கொடுத்து சந்தோஷத்தோடு அந்த வருட விடுமுறை வேதாகம பள்ளியை நிறைவு செய்வோம்.










இன்னுமாய் எங்களது ஊழியத்திற்காகவும் அதின் தேவைகளுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களது ஜெபத்தினாலும் காணிக்கைகளினாலும் தாங்குங்கள். உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காகவும் நாங்களும் ஜெபித்துக் கொள்கிறோம்.

Name: Silambarasan J
Ac No: 0970101059902
IFSC Code: CNRB0000970
Branch: Perambur Barracks Road
Mobile: 9710284105, 7200221052